தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 7, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2035

2004 ஜூலை 22, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 11–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

" உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு "

நிலையற்ற வாழ்க்கையில், உறக்கத்திற்குப் பிறகு விழிப்பதைப் போன்றது பிறப்பு; திரும்ப விழிக்க முடியாத மீளா உறக்கம் கொள்வதே இறப்பு.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. செ. பட்டாபிராமன் அவர்கள் 26–02–2004 அன்றும், திரு. சி. வெங்கடகிருஷ்ணா ராவ் அவர்கள் 26–03–2004 அன்றும், திரு. கே.ஏ. வகாப் அவர்கள் 05–05–2004 அன்றும், திரு. ஆ. அதியமான் அவர்கள் 07–05–2004 அன்றும், திரு. கே.பி. நாச்சிமுத்து அவர்கள் 26–05–2004 அன்றும், திரு. மு. அரங்கநாதன் அவர்கள் 31–05–2004 அன்றும், திரு. வி.எஸ். மாணிக்கசுந்தரம் அவர்கள் 12–06–2004 அன்றும் மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. பட்டாபிராமன் அவர்கள் திருவள்ளூர் தொகுதியிலிருந்து தொடர்ந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு முறையே 1977 முதல் 1980 வரை, 1980 முதல் 1984 வரை மற்றும் 1985 முதல் 1988 வரை சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

[பேரவைத் தலைவர்] [2004 ஜூலை 22

திரு. சி. வெங்கடகிருஷ்ணா ராவ் அவர்கள் அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் காக்கிநாடா பொது தொகுதியிலிருந்து அன்றைய சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1952 முதல் 1953 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலம் அமையப்பெற்ற காலம் வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே.ஏ. வகாப் அவர்கள் ராணிப்பேட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1971 முதல் 1976 வரை நன்கு பணியாற்றியுள்ளார்.

திரு. ஆ. அதியமான் அவர்கள் சேடப்பட்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1989 முதல் 1991 வரை செவ்வனே பணியாற்றியுள்ளார்.

திரு. கே.பி. நாச்சிமுத்து அவர்கள் மேட்டூர் தொகுதியிலிருந்து தொடர்ந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு முறையே 1977 முதல் 1980 வரை, 1980 முதல் 1984 வரை மற்றும் 1985 முதல் 1988 வரை போற்றத்தக்கவகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. மு. அரங்கநாதன் அவர்கள் திருவல்லிக்கேணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1977 முதல் 1980 வரை பாராட்டத்தக்கவகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. வி.எஸ். மாணிக்கசுந்தரம் அவர்கள் ஈரோடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1957 முதல் 1962 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் பேரவை உறுப்பினர்களின் மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)